**செய்தி வெளியீடு எண்: 091** **நாள்: 03.02.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 2.2.2018 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் 1 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2.05 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள சுவாமி சகஜானந்தா மணிமண்டபத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆய்வு மாணவியர் விடுதிக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

நாட்டிற்காக பெரும் தொண்டாற்றி பல்வேறு தியாகங்களைச் செய்த தலைவர்கள் மற்றும் சான்றோர்களை சிறப்பிக்கும் வகையிலும், அவர்களின் தியாகங்களை வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையிலும், நினைவிடங்கள், நினைவு இல்லங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் மணிமண்டபங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு உருவாக்கி பராமரித்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15.5.2013 அன்று சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ஏழை மக்கள் உயர்வு பெற தன் வாழ்வை அர்ப்பணித்தவரும், மக்களின் அறியாமையைப் போக்க சிதம்பரத்தில் நந்தனார் அறக்கட்டளையை நிறுவி கல்வி நிறுவனம் தொடங்கியவரும், காந்தி அடிகளை அழைத்து வந்து அறநெறி பரப்பியவரும், சட்டமன்ற மேலவை மற்றும் பேரவை உறுப்பினராக பணியாற்றியவரும், அனைவரும் ஆலயத்திற்கு சென்று வழிபடலாம் என்ற சட்டம் இயற்ற காரணமாக இருந்தவரும், விளிம்பு நிலை மக்களுக்காக பாடுபட்டவருமான சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு, அவர் வாழ்ந்த இடமான சிதம்பரத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் 1 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2.05 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள சுவாமி சகஜானந்தா மணிமண்டபத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், தமிழ் முனைவர் பட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டம், ஓலைச்சுவடிகள் பட்டயம், திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயம் ஆகிய பட்டம் மற்றும் பட்டய வகுப்புகளில் ஆண்டுதோறும் ஏறத்தாழ இருநூற்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இந்நிறுவனத்தில்

பயிலும் மாணவிகள், தற்போது தனியார் தங்கும் விடுதிகள் மற்றும் வீடுகளில் வாடகை செலுத்தி தங்கி பயின்று வருகின்றனர். இம்மாணவிகளின் பொருளாதார நிலையினை கருத்தில் கொண்டு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில், 2400 சதுர அடி பரப்பளவில், 24 மாணவிகள் தங்கும் வசதியுடன் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆய்வு மாணவியர் விடுதிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்யும் மாணவர்களுள் தெரிவு செய்யப்படும் 8 பேருக்கும், தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் ஓராண்டுக் கால பட்டய வகுப்பு பயிலும் மாணவர்களுள் தெரிவு செய்யப்படும் 10 பேருக்கும் மாதந்தோறும் ஆய்வு உதவித் தொகை வழங்கப்படும் என்ற 2017–18ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பிற்கிணங்க, தெரிவு செய்யப்பட்ட முனைவர் பட்ட ஆய்வு மாணவ, மாணவிகள் 8 பேருக்கு தலா ரூ.5,000/–க்கான மாதாந்திர ஆய்வு உதவித் தொகைக்கான காசோலைகளையும், தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் ஓராண்டுக் கால பட்டய வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் 10 பேருக்கு தலா ரூ.3,000/–க்கான மாதாந்திர ஆய்வு உதவித் தொகைக்கான காசோலைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) முனைவர் கோ. விசயராகவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 3.2.2018**